1967 ஜூலை 14]

(*b*) whether the Government will get any financial aid from the Central Government for such "Neighbourhood schools"?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

Thiru K. VINAYAKAM : Sir, is it a fact that the Central Government have recommended to the Madras Government to start such schools because they are largely in vogue in England where most public schools have got "Neighbourhood" schools so as to feed not only children coming from the higher strata of society but also children coming from the lower strata of society?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நெய்பர்ஹூட் ஸ்கூல் இருக்கவேண்டும் என்பதை இந்தக் கல்விக் கமிஷன் பரிந்துரை செய்திருக்கிறது. நெய்பர்ஹூட் ஸ்கூல் என்ற அளவுக்கு அதன் நோக்கம் என்ன என்றால், ஒரு பள்ளி எந்தப் பகுதியிலே இருக்கிறதோ அந்தப் பகுதியிலே இருக்கிறவர்கள்மட்டும்தான் அந்தப் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பதாகும். அந்த அளவுக்கு நம் நாட்டுப் பெற்றோர்கள் இசைந்து வருவார்களா என்பது பிரச்னையாக இருக்கிறது. உதாரணமாக எடுத்துக்கொண்டால், ஒரு குறிப்பிட்ட உயர்நிலைப் பள்ளியில் அந்த ஏரியாவிலுள்ள மாணவர்கள் மட்டும்தான் சேரவேண்டுமே தவிர, வேறு பகுதி மாணவர்கள் அந்தப் பள்ளிக்கு வரக்கூடாது. க்ரிஸ்டியன் காலேஜ் ஸ்கூல் இருக்கிறதென்றால், அந்த ஸ்கூலைச் சுற்றி இருக்கிறவர்கள்தான் அந்த ஸ்கூலில் சேரவேண்டும். வடசென்னையில் இருக்கிற ஸ்கூல் என்றால், அந்தப் பகுதியிலுள்ள, அந்த ஸ்கூலைச் சுற்றி இருக்கிற மாணவர்கள்தான் அந்த ஸ்கூலில் சேரவேண்டும். வேறு பகுதி மாணவர்கள் இந்தப் பள்ளிக்கு வர முடியாது, இந்தப் பகுதி மாணவர்கள் வேறு பள்ளிகளுக்குச் செல்ல முடியாது. இது நம்முடைய நாட்டு நடைமுறைக்குச் சரிப்பட்டு வராது. துவக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், கிராமங்களில் அந்த முறைதான் இருக்கிறது. அந்த முறையைக் கொண்டு வந்தால் ஒரு பள்ளியில் கொண்டுசேர்க்க விரும்பும் பெற்றோர்கள் அந்தப் பகுதிக்கு இடம் பெயர்ந்து வரவேண்டும். அந்த முறையில் நெய்பர்ஹூட் ஸ்கூல்ஸ் என்று கட்டாயமாகக் கொண்டு வந்தால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. பெற்றோர்கள் ஒரு குறிப்பிட்ட பள்ளியில் சேர்க்கவேண்டுமென்று நினைக்கலாம். அதற்காகப் பள்ளிக்கூடம் இருக்கிற இடத்திற்குக் குடியேற வேண்டியிருக்கும். அப்படிக் குடியேறிப் படிக்க வைப்பதிலே கஷ்டங்கள் இருக்கும். இப்போது எல்லாப் பள்ளிகளிலும் வசதிகளைப் பெருக்கவும், எல்லாப் பள்ளிகளும் ஒரே தரத்தில் இருக்கவும், எல்லா ஆசிரியர்களும் ஒரே தரத்தில் இருக்கவும், எல்லாப் பள்ளிகளிலும் உள்ள ஆய்வுக்கூடங்கள் ஒரே தரத்தில் இருக்கவும் கவனம் செலுத்திய பிறகு, எல்லாப் பள்ளிகளும் எல்லா முறையிலும் ஒரே தரமாக இருக்கிறது என்று கருதக்கூடிய நிலைமை வருமானால், அது வெற்றி பெறக் கூடும். அது வரையில் பெற்றோர்கள் விருப்பத்திற்கு மாறான காரியத்தைச் செய்யக் கூடாது.

பள்ளி உதவி மேற்பார்வையாளர்கள்

*328 வினா.—திரு. மா. பா. சாரதி : மதிப்பிற்குரிய கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூட உதவி மேற்பார்வையாளர்கள் (Junior Deputy Inspectors of Schools) ஓய்வு பெறும் வயது என்ன?

(இ) அதை ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதுக்குச் சமமாக உயர்த்த யோசனையுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஐம்பத்தைந்து வயது.

(இ) யோசனைகள் வந்துள்ளன. அவைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, பள்ளி மேற்பார்வையாளர்களாக, ஆசிரியர்களாக இருந்து அந்தப் பதவிக்கு வருவதால், ஆசிரியர்களுக்குள்ள வயதை அவர்களுக்கு நிர்ணயம் செய்ய இந்த சர்க்கார் முற்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்வித் துறையில் உள்ள பாடம் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்களுக்கு வயது 55-லிருந்து 58-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்ற நிர்வாகத் துறையில் அரசிதழ் பதிவு செய்தவர்களுக்கு 58-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. பதிவு பெறாதவர்கள் வயதை உயர்த்துவதுபற்றி இப்போது ஆராயப்பட்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கை காரணமாக ஜூனியர் டெபுடி இன்ஸ்பெக்டர்ஸ் ஆஃப் ஸ்கூல்ஸ் இன்றைக்கு எவ்வளவு பேர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய தகவல் இப்பொழுது இல்லை.

Safety Belts

*329 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government propose to order the wearing of "Safety belts" for all the automobile drivers, which will secure the drivers fixed to the seats while driving ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை.

திரு. கே. விநயகம்: ஸார், இந்த சேஃப்டி பெல்ட் மோட்டார் வண்டிகளை ஓட்டுகிற டிரைவர்களுக்கு மாத்திரம் என்று அல்ல; மோட்டார் சைக்கிளில் போகிறவர்களுக்கும், ஸ்கூட்டர்களில் போகிறவர்களுக்கும் இது பயன்படும் என்று கருதப்படுகிறது. அவர்களையாயினும் நிர்ப்பந்தப்படுத்தி அதைப் போட்டுக்கொண்டுதான் ஓட்ட வேண்டும் என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் "பை நெகோஷியேடிங் எ பெண்ட்"—அதாவது ஒரு இடத்தில் திரும்பும்போது—அவர்களுடைய இடத்திலிருந்து நழுவிக் கீழே விழுகிறார்கள். அப்போது பக்கத்தில் இருக்கிற மங்கையும் கீழே விழும் நிலைமை இருக்கிறது. அப்படி இல்லாமல் இரண்டு பேர்களையும் சீட்டோடு கட்டிப்போட அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதைப் போடுவதன்மூலம் ஒரு அருமையான காட்சியைக் காணத் தவறி விடுவார். அதற்கு இப்போது செயற்குறிப்பு எதுவும் இல்லை.

தூறு எடுக்கும் கருவிகள்

*330 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஏரிகளில் தூறு எடுக்கும் கருவிகள் வடார்க்காடு மாவட்டத்திற்கு எப்போது கொண்டு வரப்படும் ?